கொழும்பு - கொள்ளுப்பிட்டி - அஸ்ரல் கட்டிடத் தொகுதி 9ம் மாடியுறை

# ஸ்ரீதேவி கருமாரி அம்மன்
# ஸ்ரீ ஐயப்ப சுவாமி திருக்கோவில்

# திரு ஊஞ்சற் பாமாலை மலர்




ஊஞ்சற்பா யாத்தவர்
செஞ். சொற் கவிதா சிரோமணி
துன்னையூர் ராம். தேவலோகேஸ்வரக் குருக்கள்



வெளியீடு : ஸ்ரீதேவி கருமாரி அம்மன் கோவில்
கொள்ளுப்பிட்டி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# கொழும்பு - கொள்ளுப்பிட்டி
# அஸ்ரல் கட்டிடத் தொகுதி 9ம் மாடியுறை
# ஸ்ரீதேவி கருமாரி அம்மன்
# ஸ்ரீ ஐயப்ப சுவாமி திருக்கோவில்
# திரு ஊஞ்சற் பாமாலை மலர்



*வெளியீடு : ஸ்ரீதேவி கருமாரி அம்மன் கோவில்*
*கொள்ளுப்பிட்டி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *கொழும்பு , மருதானை கப்பித்தாவத்தை*
## *ஸ்ரீ பால செல்வ விநாயகர் கோவில்*
## *பிரதமகுரு. சிவாகம பூஷணம், வேதாகம மாமணி*
## **பிரம்மஸ்ரீ பா. சண்முகரட்ண சர்மா J.P** *அவர்களின்*

# *ஆசியுரை*



கொள்ளுப்பிட்டி கருமாரி அம்மன் கோவில் ஊஞ்சற்பாக்கள் தொகுப்பு மலராக வெளிவருதில் மகிழ்ச்சி. ஆலய உற்சவங்களிலே டோலோ உற்சவம் என்ற சிறப்புப் பெறுவது இந்த திரு ஊஞ்சல். ஆலய ஸ்தல நாமங்களுடன் அமையும். இறைவனைப் பாமாலை கொண்டு அவன் நாமத்தை இசைப்பது எல்லோராலும் எளிதில் முடியாது. அந்த வகையில் ஆலயத்தின் பிரதமகுருவாய் முப்போதும் திருமேனி தீண்டும். சிவஸ்ரீ. ராம். தேவலோகேஸ்வரக் குருக்கள் அவர்களே. அவ்வாலய விநாகயர், அம்பாள், முருகன், திரு ஊஞ்சற் பாக்கள் இயற்றியது சிறப்பம்சமாகும். அதிலும் எனக்கு இன்னுமொரு பெருமை. சிறுபையனாய், எமது ஆலயத்தில் உதவிக் குருவாய் சுமார் ஆறு ஆண்டுகள் கடமை புரிந்தார். அப்போதே அவரின் கவித்திறமை, பேச்சுத்திறமை, கட்டுரை புனையும் திறமை என்பன நிறைந்து காணப்பட்டது. அந்தத் திறமையின் முயற்சி. இன்று மலர் வெளியிடும் அளவில் பூரணம் பெற்று இருப்பது. அவரின் பெரியோரை மதிக்கும் பண்பு. தன்னடக்கம் என்பனவே. அவர் எமது ஆலயம் விட்டுக் கருமாரி அம்மன் ஆலயம் சென்றார். இன்றுவரை அவ்வாலயத்தின் பிரதம குருவாய் அவர் ஆற்றும்பணி. நாம் காணக்கூடியதாய் உள்ளது. மேன்மேலும் அவர் தமிழ்க்கவி தொடர எமது பூரண ஆசியும். ஆலய நிர்வாகி கலாநிதி S. செல்வகுமார் அவர்கட்கும். எனது ஆசி கூறி பாலசெல்வ விநாயகரைப் பிரார்த்தித்து எனதுரையை நிறைவெய்துகின்றேன்.

*நன்றி*

வேதாகம மாமணி,
**பா. சண்முகரட்ண சர்மா J.P**
கப்பித்தாவத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20.10.2000

வெள்ளவத்தை

## Samy Visvanatha Kurukkal

### *கொழும்பு , கொள்ளுப்பிட்டி ஒன்பதாம் மாடியில் கோவில் கொண்டருள் நல்கும் ஸ்ரீ கருமாரி அம்பாள் ஆலய மூர்த்திகளின் அனுக்கிரகத்துடன் அங்குள்ள மூர்த்திகளின் பெயரில் பாடப்பட்ட திருவூஞ்சற் பாமாலை*



ஷெ ஆலயப் பிரதம குருவும் தமிழ், இலக்கிய சமஸ்கிரு பாஷா ஞானியுமாகிய பிரம்மஸ்ரீ ராம். தேவ லோகேஸ்வரக்குருக்கள் அவர்களால் இப்பாமாலை அமைக்கப் பெற்றது. எனவே இவரது தந்தையார் தமிழ், சமஸ்கிருதம், புராணங்கள் என்பவற்றைக் கற்றுத் திறமை வாய்ந்த உத்தமகுரு அவரின் வழித் தோன்றலாகிய மகனின் பேரறிவும் கலைத் திறனும் தந்தையின் ஆசியால் பெற்றவர். அதனால் இவர் இது போன்ற பலபாடல்களையும், சோதிட பலன்களையும் மக்கள் மனதில் நினைவு கூர என்றும் தனது பணியாகக் கருதிச் செயலாற்றி வருவதும் ஷெ ஆலயத்தில் நித்திய, நைமித்திய பூஜை, உற்சவம், காமிய வித்தியான, லட்சார்ச்சனை ஹோமங்களையும் நடாத்தி வைக்கும் திறமைக்கும், பெருமைக்கும் உரியவர். எனவே இவரின் அருள் நிறைந்த பாமாலை நூல் பக்தப் பெருமக்கள் எல்லோரது உள்ளங்களில் படிந்து அனுக்கிரகம் பெற அன்னையின் பாதமலர் பணிந்து எமது நல்லாசிகளை அன்புடன் சமர்ப்பிக்கிறேன்.

"வாழ்க அவரின் சிவத்தொண்டு வளர்க அவரின் குருத்துவப் பணி"

*சுபம்*

*"லோகா சமஸ்தா சுகினோபவந்து,"*

இங்ஙனம்,

அன்புக்குரிய,

***சாமி. விஸ்வநாதக்குருக்கள்***

*பிரதிஷ்டா சிரோன்மணி, வேதாகம சூடாமணி*

*(நவாலியூர்) வெள்ளவத்தை, கொழும்பு – 06*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆதீன குரு*
*"சிவாகமஞானபானு" சிவாசார்ய*
## சுவாமிநாத பரமேஸ்வரக்குருக்கள்
## ஆசியுரை



கொள்ளுப்பிட்டி ஸ்ரீதேவி கருமாரி அம்மன் கோவில் திரு ஊஞ்சற் பாமாலை விநாயகர், அம்பாள், முருகன் என அமைந்த திரு மூர்த்தங்களுக்கு ஆலய பிரதமகுரு ராம். தேவலோகேஸ்வரக் குருக்கள் அவர்களால் ஆக்கப்பட்டு வெளியீடு நடைபெறுவது மகிழ்ச்சி. இறைவனுடைய நாமத்தைப் போற்றி வழிபாடு செய்வது எமது சமயத்தில் முக்கிய இடம் வகிப்பதாகும். ஆலயங்களில் நடைபெறும் அர்ச்சனை இதற்கு முன் உதாரணம். அதேபோல் நாமகீர்த்தனை, பாமாலை என்பன இறைவனை நினைந்து அவ்வாலய ஸ்தல நாமங்களுள் அமைவன. அதில் முதன்மை பெறுவது திருஊஞ்சல், கவி ஆற்றல், சொல்வளம், தமிழ் பாண்டித்தியம் என்பன எல்லோருக்கும் எளிதில் அமைவது இல்லை. அப்பேறு இயற்கையாய் அமையப் பெற்று அதை நல்ல முறையில் செயற்பட வைக்கும் சிவஸ்ரீ ராம் தேவலோகேஸ்வர குருக்களின் கவித் திறன் மேலும் சிறக்கவும் இப்படியான பணிகளுக்கு ஊக்கம் கொடுக்கும் ஆலய நிர்வாகி. S. செல்வகுமார் J.P அவர்கட்கும் எமது நல்லாசிகளை வழங்கி வாழ்த்துகின்றேன்.

*சுபமஸ்து*

*பிரஷ்டா பூஷணம்,*
**நயினை சிவாசார்ய சுவாமி நாத**
**பரமேஸ்வரக் குருக்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

முருகன் துணை

# கொம்பனித் தெரு நால்வர் மணிமண்டப பாலசெல்வ விநாயகர் கோவில் பிரதமகுரு "வேதாகம மாமணி" ஜோதிஷ வித்யா சாகரம் சந்திரசேகரக்குருக்கள்

## ஆசியுரை



*மன்னிய சீர்பெறு மிலங்கைத் தீவின்*
*தென்றிசைப் பட்டினம் திருவுள மாளிகை*
*நெரீய கொழும்பு நகரின் மாடியில்*
*வதியுங் கருமாரி யம்பாள் கிருபையி*
*னருள்செறி குருவாந் தேவலோ கேஸ்வரன்*
*பக்தர் குழாங்கள் பரவசமாப் பாடிய*
*வூஞ்சற் பதிகம் விநாயக னம்மன்*
*முருக னருட்பா மூன்று மிணைத்து*
*நூலுரு வாகவே நுட்பமா யாத்தான்*
*மேனெறி யடைய வேண்டும் வரம்பெற*
*மாய வாழ்வின் மயக்க மழிவுறத்*
*தாய்தம ரொன்றாய்த் தங்கியே வாழத்*
*துன்பமு மச்சமுந் துயங்கி நீங்கவே*
*யன்பு மறனு மருளும் பெருகத்*
*தென்புட னோதித் தெளிகுவம்*
*மன்பதை யுலகம் வாழ்ந்திட நாமே.*

இப்படிக்கு,
**சிவஸ்ரீ சுப. சந்திரசேகரக்குரு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வேதாகம வித்யா பூஷணம்
**பிரம்மஸ்ரீ. விஸ்வநாராயண சர்மா**
(வி. சோமசுந்தரக் குருக்கள்)

**SRI. VISHVANARAYANA SHARMA** (V. Somasundaram Kurukkal)

250/7, Aluthmawatha,
Colombo-15. Sri Lanka.

250/7, அளுத்மாவத்தை,
கொழும்பு-15. இலங்கை.




# ஆசியுரை

உலகியல் வாழ்வில் உல்லாசம் தருவது ஊஞ்சல். சிறுவர் முதல் முதியோர் உவகையுடன் ஊஞ்சலாடுவதும், இன்றும் பல வீடுகளின் கூடங்களில் ஊஞ்சல் அமைந்திருப்பதும் இதற்குச் சான்றாகும். சைவாகம விழாக்களில் "திருஊஞ்சல்" விழா அனுக்கிரக விழாவாக, கும்பாபிஷேக தினங்களிலும், கொடியிறக்க விழாவிலும் இன்றும் நடை பெற்று வருவதை அனைவரும் அறிவர். சிதம்பரம் ஸ்ரீநடராஜப் பெருமானின் திருவாதிரை ஊஞ்சலும் திரு நடனமும் அருள் பெருக்கும் திருவிழாவாக அமைகின்றது.

திருவூஞ்சற் பாக்களின் முதலாவது ஆக்கியோனாக மணிவாசக சுவாமிகள் விளங்குகின்றார். இவர் இயற்றிய 'திருப்பொன்னூஞ்சல்" 8ம் திருமுறையாகிய திருவாசகத்துள் அடங்குகின்றது. காலக்கிரமத்தில் அறங்காவலர்களும் தர்மவான்களும் புலமை மிக்க கவிஞர்களினால் தத்தமது ஆலய சுவாமிகளுக்கெனத் தனியாக ஊஞ்சல் பாக்களை இயற்றி வெளியிட்டு வருகிறார்கள்.

இவ்வகையில் கொள்ளுப்பிட்டி ''அஸ்ரல் ஆர்க்கேட்' வர்த்தகத் தொகுதியின் 9ம் மாடியுறை ஸ்ரீதேவி கருமாரி. ஐயப்பசுவாமி கோவில் அறங்காவலர் கலாநிதி செ. செல்வகுமார் து. அவர்களும் தனது கோவிலின் ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ சுப்பிரமணியர், ஸ்ரீ கருமாரி அம்மன் (முன்னைய வெளியீடு) பேரில் ஊஞ்சல் பாமாலை சூடி மகிழ்கின்றார்.

இவ்வூஞ்சல் பாக்கள் யாவும் ஷை தேவஸ்தான பிரதம குருவும் தமிழ்ப் புலமையும் எழுத்தாற்றலும் மிக்கவரான "செஞ்சொற் கவிதா சிரோமணி" சிவஸ்ரீ ராம். தேவலோகேஸ்வரக் குருக்கள் அவர்களால் புனையப்பட்டவையாகும். குருக்களவர்கள் தலைநகரிலுள்ள பல சைவாலயங்களுக்கு ஊஞ்சல் பாக்களை இயற்றிப் பாராட்டுப் பெற்றவர். அவர் தன் நாவில் உறைந்தருளும் வாணி சரஸ்வதியின் திருவருளால் மேலும் பல கவிதைகள் ஆக்கும் வல்லமை பெற வாழ்த்துகிறேன்.

இவ்வூஞ்சற் பாமாலை நந்நூலாக வெளிவரவும் பணியில் பங்கு கொண்ட அனைவரும் மேன்மையுறவும் எனையாளும் என் அன்னை திருவடிமலர் பணிந்து நல்லாசி வழங்குகிறேன்.

*"நாவு தோறும் நடமிடும் நலங்கொள் வாணியின்*
*பூவடியினை வணங்குவோமாக"*
சுபமஸ்து

*அன்புடன்,*
*வேதாகம வித்யா பூஷணம்,* **ஸ்ரீ விஸ்வ நாராயணசர்மா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"செஞ் சொற் கவிதா சிரோமணி"
சிவஸ்ரீ. ராம் தேவலோகேஸ்வரக் குருக்கள்
(பிரதம குரு)
ஸ்ரீதேவி கருமாரி அம்மன் ஸ்ரீ ஐயப்பசுவாமி
திருக்கோவில்

428, ஆர். ஏ. டிமெல் மாவத்தை,
கொழும்பு - 03.
தொ.பே. 575281. - 301997

உ
சிவமயம்



"SEN SOT KAVITHA SIRONMANI"
**Sivasri. Ram. Thevalogeswara Kurukkal**
(Chief Priest)
Sri Devi Karumari Amman Sri Ayyappa
Swami Temple.

428, R. A. De Mel Mawatha,
Colombo - 03.
T.P. 575281



## நன்றி நவில்கின்றேன்

முப்போதும் பால செல்வ விநாயகரைத் தீண்டும்
மூத்த சிவாசாரியர் சண்முகரட்ண சர்மாவிற்கும்
எப்போதும் குடமுழுக்கு நடாத்தி உலகப் புகழ் ஓங்கும்
எழில் விஸ்வநாதக்குரு, பரமேஸ்வரக்குரு பெருந்தகைக்கும்
தப்பாது ஜோதிடம் கூறிடும் சந்திரசேகரக்குரு விற்கும்
தாரணி போற்றும் சர்வசாதக நாரயண சர்மாவிற்கும்
முப்போதும் ஆலய அறம் காக்கும் செல்வக் குமாருக்கும்
முக மலர்வு நிறைந்த என் நன்றி நவில்கின்றேன்.

*ஆலயப் பிரதமகுரு,*
*"செஞ்சொற் கவிதா சிரோமணி"*
**துன்னையூர் ராம். தேவலோகேஸ்வரக் குருக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய அறங்காவலர்
கலாநிதி S. செல்வகுமார் J.P அவர்களின்

## நன்றியுரை



எமது ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் அன்னை கருமாரி அம்பாளுக்குத் திரு ஊஞ்சல்விழா எமது ஆலய வருஷாபிஷேக தினத்தன்று ரதோற்சவம் நிறைவுற்று நடைபெறுவதுண்டு. தற்போது நூதன மூர்த்திகளாய் பிரதிஸ்டை செய்யப்பட்ட ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ சுப்பிரமணிய மூர்த்தங்களுக்கு திருஊஞ்சல் முறையே விநாயக சதுர்த்தி உற்சவத்திலும், கந்தசஷ்டி திருக்கல்யாண உற்சவத்திலும் அமைய திருவருள் கூடி. அம்பாள் திருஊஞ்சல் இயற்றிய எங்கள் ஆலய பிரதம குரு செஞ்சொற் கவிதா சிரோமணி. ராம் தேவலோகேஸ்வரக் குருக்கள் முறையே. விநாயகர், முருகன், திரு ஊஞ்சற் பாக்களையும் யாத்துள்ளார். அந்த வகையில் இவற்றை ஒரு புத்தகமாகத் தொகுத்து வெளியிட திருவருள் கைகூடி அப்பணி சிறக்க முன்னிற்கும் ஆலய பிரதமகுருவிற்கும் இம்மலருக்கு மகுடம்வைத்தாற்போல் ஆசியுரைகள் வழங்கிய பா. சண்முகரட்ண சர்மா J.P சாமிவிஸ்வநாதக் குருக்கள், சுவாமி நாத பரமேஸ்வரக்குருக்கள், S. சந்திரசேகரக்குருக்கள், ஸ்ரீ விஸ்வ நாரயண சர்மா அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றி கூறி அனுசரணை வழங்கிய அனைவருக்கும் நன்றி கூறி அனைவருக்கும் அம்பாள் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

*"சர்வம் சக்தி மயம்"*

இவ்வண்ணம்,
ஆலய நிர்வாகஸ்த்தர்
**கலாநிதி S. செல்வகுமார் J.P**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# கொள்ளுப்பிட்டி "அஸ்ரல்" கட்டிடத் தொகுதி 9ம் மாடியுறை ஸ்ரீதேவி கருமாரி அம்மன் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ செல்வ விநாயகர் திரு ஊஞ்சல்

## காப்பு

சீராருங் கைலை மலை வாசரீசர்
சிற்பரப் பிரணவச் சித்தியோங்கும்
தாரரு மதவிகடத் தந்தி வக்ரதுண்டர்
தருவளம் செய் கொழும்பு நன்னகரமேவி
ஏராரும் புகழ் கொள்ளுப்பிட்டி நவதளகூடமிலங்கும்
ஏகதந்த செல்வ விநாயகர் மேலூஞ்சலேத்த
கராரும் காவிய பாரதம் புவிக்களித்த செல்வக்
கணபதியே கருணைதந்து காப்பதாமே.

## நூல்

1. அருமறைகள் நான்குமுயர் தம்பமாக
ஆறங்க முபநிடதம் விட்டமாகப்
பொருளிறை யாகமஞ் சீர் நாண தாகப்
பொழிந்திடுமோர் பிரணவமே பொற் பீடமாகப்
தரு நிறையருள் பஞ்சகலையணிகளாக
தங்கநிற நின்மேனியழகு திண்மையாக
திருநிறை கொள்ளுப்பிட்டி நவதளகூடமேவும்
திகழ் செல்வ விநாயகரே ஆடிரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. சுந்தர மேனியிற் பவளமணி மாலையாட
சூழ்ந்த நின் பக்தர்குழாம் திருவடி தாங்க
இந்திரனார் பொன் ஊஞ்சற் பலகையேந்தியாட்ட
இசியும் இனிய அருள் மழை பொழிந்தோங்க
சந்திர சூரியர் நின் பக்கம் கவரி வீசியாட்ட
சான்றோர் நற் கவிமழை பொழிந்தோங்க
சிந்தை மகிழ் கொள்ளுப்பிட்டி நவதளக் கூட மோங்கும்
சீர் செல்வ விநாயகரே ஆடீரூஞ்சல்.

3. வரமருளும் முமைபாகர் நல்ஆசி கூட
வாணியுடன் பூமகளும் வடம் தொட்டாட்ட
பரவுலகு காக்கும் பரந்தாமனும் தொட்டாட்ட
பாவை சித்தி புத்தியர் பாங்குணேயாட
தரணிவாழ் நின் பக்தர் பாதபூசைசெய்தாட்ட
தகும் வரம் தந்தே மகிழ்ந்தூஞ்சலாட
சிரமென மிளர்கொள்ளுப்பிட்டி கூடமமர்ந்த
சிங்கார செல்வ விநாயகரே ஆடீரூஞ்சல்.

4. பொன்முடி மிளிர்ந்து தகதகத்தாட
பொலிவுடனே திருமேனி திகழ்ந்திருந்தாட
மின்னு நவரத்தின மாலையது மார்பிலசைந்தாட
மிருது மரகத மணிக் குண்டலங்கள் காதிலாட
அன்ன நடை தேவ மங்கையர் நாட்டியமாட
அழகு கந்தர்வர் பலமலர் தூவியாட்ட
நன்னகர் கொள்ளுப்பிட்டி நவதளக் கூடமேவும்
நாத செல்வ விநாயகரே ஆடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. சிந்துர மார் திகழ் நாயகராயமர்ந்தாட
சிரஞ்சூடும் அறுகுவில்வம் சிலிர்த்தாட
இந்திர புரி தேவர் குழாம் சூழ்ந்திருந்தே யாட
இனிய தென்றலாய் வாயுவும் மருவியாட
மந்திர மோதி வேதியார் குழாம் மகிழ்ந்தாட்ட
மாணிக் மாலை மார்பில் தடம்புரண்டாட
சுந்தர எழில் நிறை கொள்ளுப்பிட்டி கூடமேவும்
சுகம்தரு செல்வ விநாயகரே ஆடீரூஞ்சல்.

6. அந்தி நிற செங்கதிரோன் குடைபிடித்தாட்ட
அழகு சோமன் நின்பாதம் ஏந்தியாட்ட
வந்திரு அங்கார புதன் நின் ஆசனம்சேர்த்தாட்ட
வாஞ்சையுடன் குரு. சுக்கிரன் மலர்தூவியாட்ட
மந்த சனீஸ்வரன் நின் பக்தரை பாதுகாத்தாட்ட
மருவியே ராகு, கேது, நின் தொந்தியிலாட
நந்தவன வதனம் நிறை கொள்ளுப்பிட்டி யோங்கும்
நல் செல்வ விநாயகரே ஆடீரூஞ்சல்.

7. அரி பிரமன் அன்புடனே வடந்தொட்டாட்ட
ஆசிகூறி அன்னை அபிராமியும் தொட்டாட்ட
விரிசடையோன் விருப்புடனே வடம் பிடித்தாட்ட
வீர வெற்றி வேலோனும் சேர்ந்தாட்ட
வரிசை யொடு தேவர் குழாம் சூழ்ந்து நின்றாட்ட
வாஞ்சையொடு நின் மூஷிக வாகனமுமாட்ட
புரியமருள் கொள்ளுப்பிட்டி பதிக்கேயெனமேவும்
புத்தி செல்வ விநாயகரே ஆடீரூஞ்சல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. தவ நந்தி தேவன் மிருதங்க மிசைத்தாட்ட
தரும் கானமிசை நாரத முனி புனைந்தாட
சிவ கணங்கள் பேரிகை சங்க நாதம் பொழிந்தாட்ட
சீருடனே கலைமகள் வீணையிசைந்தாட்ட
கவரி சிலிர் தென்றலாய் வாயுதேவன் சூழ்ந்தாட்ட
கனகமணி நாணயம் பொழிந்து திருமகளாட்ட
உவகை தரு கொள்ளுப்பிட்டி நவதளக் கூடமோங்கும்
உன்னத செல்வ விநாயகரே ஆடீரூஞ்சல்.

9. மன மகிழ்ந்து நின்கரம் அபயவரம் தந்தாட
மாசில்லா நின்னருள் மருவியெமைச் சேர்ந்தாட்ட
சின விஷமுடை சர்பமது நின் அரையிலிருந்தாட
சிங்கார கருமாரியம்மை வடந் தொட்டாட்ட
அனல் தீர்க்கும் அறுகம்புல் நின் சிரசிலாட
ஐயப்ப வேங்கடேசர் அன்புடன் வடமாட்ட
தினமருள கொள்ளுப்பிட்டி நவதளக் கூடமோங்கும்
தீர செல்வ விநாயகரே ஆடீரூஞ்சல்.

10. திருவருள் சுரந்தளிக்கும் செல்வ கணபதியாடீரூஞ்சல்
திங்கள் எழில் குணநிதியே ராடீரூஞ்சல்
மருப்பொடித்து கதை புனைந்த கணபதியாடீரூஞ்சல்
மங்கள வாழ்வின் பெருநிதியே ராடீரூஞ்சல்
கருணைதரு துதிக்கரம் கொண்டவரே யாடீரூஞ்சல்
கற்பத்தரு வருள் சுரப்பவரே யாடீரூஞ்சல்
அருமைநகர் கொள்ளுப்பிட்டியமர்ந்தவரே யாடீரூஞ்சல்
ஆனைமுக செல்வ விநாயகரே யாடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்து

திருமருவு சித்தாந்த சைவம் வாழி
திகழ் உலக மன்னுயிர்கள் சிறந்து வாழி
உருமருவு அறமோங்கி வாழி வாழி
உயர் அந்தண குலத்தோர் பூஜை நெறி வாழி
கருமருவு கற்பு நெறி மங்கையர் வாழி
கருணை கொண்ட மெய்யடியார் குழாம் வாழி
பெருமை நகர் கொள்ளுப்பிட்டி பதி வாழி வாழி
பேராள செல்வ விநாயகர் அருள் வாழி வாழி.

*சுபமஸ்து*

***யாத்தவர்:***

**துன்னையூர் ராம். தேவலோகேஸ்வரக்குரு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
"ஸ்ரீ விக்ன விநாயகர் பாதசரணம்"

# திருவருள்மிகு அன்னை
# ஸ்ரீ தேவி கருமாரி அம்பாள்
# திரு ஊஞ்சற் பாமாலை

*ஆக்கியோன்: "செஞ்சொற் கவிதா சிரோண்மணி"*
ராம். தேவலோகேஸ்வரக் குருக்கள்

## காப்பு

சீர்மேவு செல்வ வளமார் திகழிலங்கைத் தீவின்
சிறந்த தலைநகராம் கொழும்பு தன்னில்
பேர்மேவு கொள்ளுப்பிட்டி பதியமாந்தருளும்
பெருமையுடைய அன்னை கருமாரியம்பிகைபால்
நேர்மேவு செந்தமிழ் ஊஞ்சற்பா புனைந்திடவே
நேர்த்தியுடன் நல்லருள் தந்து காத்திடவே
கார் மேவு கும்பக் கஜமுகத்தோன் கழல் தொழுதேன்
கருணை கொண்டு கவியருள் தந்து காப்பதாமே.

## நூல்

1. திருவளர் மார்பினிற்கினிய சோதரியே ஈஸ்வரியே
திங்கள் மலர்சிதனை வதனமதில் கொண்டவளே
கருவளர் பல்லுயிர்களுய்ய கருணையருள் புரிவளே
கங்கை சடையணிந்தோனின் காதலுக் கினியவளே
மரு வளர் பூம்பொழிலாய் மங்காதருள் புரிபவளே
மங்களமாய் மாட்சியுடன் நவதளப்பதியமர்ந்தவளே
குருவளர் தெய்வபத்தியுடைய கொள்ளுப்பிட்டி பதிமேவு
குலமணியே! கருமாரி அம்மா ஆடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. புவனமதில் புனித பக்திதனை கால்களாக்கி

புலன்கள் ஐந்தையுமொரு விட்டமாக்கி

நவ வடிவான நாற்கரண வடங்கள் மாட்டி

நற்பொற் பலகை தனை ஒருங்கே பூட்டி

தவ மதனை மனதிற் கொண்டு எம் தாயை யமர்த்தி

தக்க வொரு தமிழிசையால் ஊஞ்சள் பாட

சிவ சக்தி சிந்தையுடை கொள்ளுப்பிட்டி பதிமேவு

சீர்மணியே! கருமாரி அம்மா ஆடீரூஞ்சல்.

3. முத்து மணித் திருமறைகள் நாற் திசைகளாக

முடிவில்லா நின் திருநாமம் பரம பந்தலாக

சிந்து கொண்ட சிவாகமங்கள் வயிர விட்டமாக

சிறப்புறு கலைஞானமது நற்கயிறதாக

சக்தியுடை பிரணவமே பொற் பீடமாக

சகல ஜீவ ராசிகளும் நின் பாதமாக

பக்தி நெறி தனையுடை கொள்ளுப்பிட்டி பதிமேவு

பார்வதியே! கருமாரி அம்மா ஆடீரூஞ்சல்.

4. கருங் கூந்தல் காற்றினிலே அசைந்தாட

கருமை நிற விழியிரண்டும் அருள் தந்தாட

பெரும் சினமுடை பஞ்ச நாகம் நின் திருமுடி நிழல்தந்தாட

பேத மின்றி அனைத்துலகும் நின் பாதம் போற்றியாட

அரும் தவ முனிவரெல்லாம் நினை சரணடைந்து துதித்தாட

அன்னையவள் மணிமாலை மார்பிலே தடம்புரண்டாட

பெரும் செல்வ வளமுடைய கொள்ளுப்பிட்டி பதிமேவு

பெருநாயகியே கருமாரி அம்மா ஆடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. தந்தி முகனும் மால் அரனும் நான் முகனுமாக
தவ முனிவ தேவருடன் முருகனும் வடந்தொட்டாட்ட
விந்தை யழகு தேவ மங்கையர் நாட்டியம் புனைந்தாட
வீரமணி கண்ட சாஸ்த்தாகவும் வடம் தொட்டாட்ட
அந்தி நிற செங்கதி ரோன் அழகுற குடைபிடித்தாட
அந்தணர் சூழ்ந்து வேத மழை பொழிந்தாட்ட
செந்தமிழ் கவிஞ்ஞறுறை கொள்ளுப்பிட்டி பதிமேவு
சேர் கருமாரியம்மா ஆடீரூஞ்சல்.

6. இந்திரனும் சந்திரனும் நின் பாத பூஜை செய்தாட்ட
இளங்கதிரோன் நின் ஊஞ்சற் பொற்பலகை ஏந்தியாட்ட
செந்தமிழரசின் கலைமகள் வீணையிசை மீட்டியாட்ட
சேர்திருமகளும் நின்னருகே சாமரம் வீசியாட்ட
கந்தனொடு வள்ளியும் குஞ்சரியும் சேர்ந்தாட்ட
களிறுடனே அகிலமே நின் கருணையால் அசைந்தாட
சிந்தை மகிழ் செம்பதியாம் கொள்ளுப்பிட்டி பதிமேவு
ஸ்ரீதேவியே! கருமாரி அம்மா ஆடீரூஞ்சல்.

7. ஓங்கி யருள் உலகிற்களிக்க உதித்தவளே
ஒளிர் மேனி யழகுடை ஒப்பற்ற நாயகியே
பாங்குடனே யுனை தினம் பணிந்திடுவோர் தமக்கு
பரிவுடனே நல்வரமருளும் பரம நாயகியே
தீங்கில்லா நெஞ்சமதை தினம் கொண்டார்க்கு நின்
திருவடி பாதமதை பணிந்திட வைத்திடுவாயே
நீங்காத செல்வ வளமுடை கொள்ளுப்பிட்டி பதிமேவு
நிழலி! கருமாரி அம்மா ஆடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. எத்திசையும் போற்றும் எங்கள் கருமாரி அம்மாவை
ஏற்றிடுவோம் எழிலூஞ்சற் பொற்பலகை மீதினிலே
சித்தி விநாயகனும் சீருடன் வலப்புற மேவியருள
சிறப்புடனே கந்த வேளும் இடப்புற மேவியருள
சத்திய தெய்வம் தர்ம சாஸ்த்தாவும் வலமிருந்துகாக்க
சான்றிடுவார் நின் புகழை நற்தமிழால் சான்றோருமே
நித்திய அருள் சுரக்க கொள்ளுப்பிட்டி பதிமேவு
நிர்மலி! கருமாரி அம்மா ஆடீரூஞ்சல்.

9. திரி சூழத்தை கரத்தினுள் கொண்டவளே
திகழ்ஒளியாய் மலர்ந்தருள் புரிபவளே
அரிஹரனன்பிற்கு இனியவளே கருமாயம்மா
அன்புடனே அனைவரையும் அருள் கொண்டு காப்பவளே
உரி மையுடன் உலக நாதன் இடப்பாக மவர்ந்தவளே
உவப்புடன் லோக மாதா வென நாமம் கொண்டவளே
பரிவுடன் அன்புடை கொள்ளுப்பிட்டி பதி மேவும்
பராசக்தியேகருமாரி அம்மா ஆடீரூஞ்சல்.

10. அரு உரு கொண்டவளே ஆடீரூஞ்சல்
ஆயிரம் நாமம் முடையவளே ஆடீரூஞ்சல்
தரு மநெறி காப்பவளே ஆடீரூஞ்சல்
தாரணிக்கு அருள் கொடுப்பவளே ஆடீரூஞ்சல்
திரு மலர் மேனி கொண்டவளே ஆடீரூஞ்சல்
தீஞ் சிந்தூர வதன முடையவளே ஆடீரூஞ்சல்
பெருமையுடை கொள்ளுப்பிட்டி பதி யுறைபவளே ஆடீரூஞ்சல்
போரரும் போற்றும் கருமாரியம்மா ஆடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்து

சீரோங்கு சிவ சின்னங்கள் வாழி வாழி

சிறப்புடை வேதாகமங்கள் வாழி வாழி

பாரோங்கு புராண இதிகாசம் வாழி வாழி

பல்லுயர் அனைத்தும் பாரினிலே சிறந்து வாழி வாழி

நேரோங்கு அந்தண குலத்தோர் வாழி வாழி

நெறி தவறா கற்புடை மங்கையர் வாழி வாழி

பேரோங்கு கொள்ளுப்பிட்டி பதி வாழி வாழி

பெருமையுடை கருமாரி அருள் வாழி வாழி.

*சுப மங்களம்*

★★★★★

★★★

★★

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொள்ளுப்பிட்டி அஸ்ரல் கட்டிட தொகுதி 9ம் மாடியுறை ஸ்ரீதேவி கருமாரி அம்மன் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும்

# ஸ்ரீ முத்துகுமார சுவாமி திருஊஞ்சல்

### காப்பு

சீரோங்கும் தென்னிலங்கை தலைநகர் மேவும்
சிறந்த நகராம் கொள்ளுப்பிட்டி பதி தன்னில்
தாரோங்கும் நவளச் சடமான அஸ்ரல் நாமபதியே
தளிர்கதிர் வேல்கொண்டேன் பேர் ஊஞ்சலேத்த
நீரோங்கும் சடையனாரின் நிமலி இயைந்த
நிர்மலனாம் பிரணவனென வுலகம் போற்றும்
பரோங்கும் அறுகுமணி மார்பனாம் தும்பி
பாலசெல்வ விநாயகன் தாள் காப்பதாமே.

### நூல்

(1) தெய்வமறை நான்கும் நற் கால்க ளாக
தெளிந்திரு சிவாகம வயிர விட்டமாக
மெய் மறைக் கலைஞானம் நற் கயிறதாக
மிளிர் பிரணவமே பொற் பீடமாக
வையகம் வாழ் பக்தர் குழாம் நின் பாதமாக
வள்ளியும் குஞ்சரியும் மருவீ மேவிட
செய்யவருனென கொள்ளுப்பிட்டி கூடமமர்ந்த
சீர் முத்துக்குமாரரே ஆடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) மேதினியிற் புனித பக்திதனை கால்களாக்கி
மேதகு புலன்களை பெரு விட்டமாக்கி
ஆதி வடிவ நாற்கரண வடங்கள் மாட்டி
அழகு பொற் பலகை தனை ஒருங்கே பூட்டி
நீதிதரு நீலமயில் வாகனனை ஊஞ்சலமர்த்தி
நிகரற்ற தமிழிசையால் கவி புனைந்தாட்ட
ஒதி வளர் கொள்ளுப்பிட்டி நவதளக் கூடமோங்கும்
ஓங்கார முத்துக்குமாரரே ஆடீரூஞ்சல்.

(3) அண்ட மெல்லாம் தனதாக்கி அனைத்துயிரும் காத்து
அருள் சொரியும் ஆதிசிவ மைந்தனாகியருளி
பண்டு புகழ் தமிழ் கவிதனை புலவர் குரைத்து காத்து
பாங்குடனே நக்கீர அருணகிரி ஆன்றோரையருளி
தொண்டர் குழாம் முருகாவென வுரைக்க முற்காத்து
தோகைமயில் மீதேறி யருளும் குமரனாகியே
கொண்ட துயர் நீர்வென கொள்ளுப்பிட்டி கூடமோங்கும்
கோல முத்துக்குமாரரே ஆடீரூஞ்சல்.

(4) அற்புதமாய் அன்னையும் அரனும் வடந்தொட்டாட்ட
அன்புடனே ஆனைமுகனும் சேர்ந்தேயாட்ட
சொற்பத நாமகளும் நாமுகனும் வடந்தொட்டாட்ட
சுந்தரத் திருமகளும் மாயோனும் சேர்ந்தேயாட்ட
கற்பகமாய் கஜமகள் குறமகள் நின்பக்கமேவியாட
களிறுடனே நின் பக்தர்குழாம் துதித்தாட
பொற்பதியாம், கொள்ளுப்பிட்டி நவதளக் கூடமேவும்
பொன் முத்துக் குமாரரே ஆடீரூஞ்சல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5) இன்பமயில் ரத்ன முடியாட பூமாலையிசைத்தாட
இடைப்புடனே முப்புரிநூலும்மணிமாலையும்சேர்ந்தாட
சின்மயமாய் நின் திருக் கரங்கள் திகழ்ந்தருளோடாட
சிறப்புடனே கோலமயில் குதூகலித்தாட
தன்னியே வேல்தாங்கி நின்வதனம் முறுவல் பூத்தாட
தவமுனிவர் குழாம் சேர்ந்து நினைந்துதித்தாட
அன்பினிய கொள்ளுப்பிட்டி நவதள கூடமோங்கும்
ஆதி முத்துக் குமாரரே ஆடீரூஞ்சல்.

(6) ஆதிசைவ அந்தணர் வேதம் மோதியாட்ட
அதிமதுரத் தமிழ்வேதம் அடியார் பாடியாட்ட
சோதி வடிவாய் தீபஒளி சூழ்ந்தேயாட்ட
சுந்தரமாய் வீணையிசை மிளிர்ந்தே யாட்ட
ஒதிடுநல் நாதஸ்வர ஓசையும் சேர்ந்தாட்ட
ஓங்கார தவில் ஒலியும் இணைந்தேயாட்ட
வீதியெல்லாம் வளம்நிறைந்த கொள்ளுப்பிட்டி மேவும்
வீர முத்துக்குமாரரே ஆடீரூஞ்சல்.

(7) ஆறுமுகம் முறவல் பூத்து அழகுடனாட
ஆதி நந்திதேவர் மிருதங்க மிசைத்தாட்ட
மாறுபடு சூரன் மாயை நீங்கி நின்பாதமேந்தி யாட்ட
மங்களமாய் மங்கையர் பக்கமேவியிருந்தாட
கூறுபட்ட சேவலும் மயிலும் நின்னருகேநின்றாட
நித்திய அருள்வேண்டி நின்பக்தர் கண்ணீர்ததும்பியாட
பேறுகொண்ட கொள்ளுப்பிட்டி நவதளக் கூடமோங்கும்
பேராள முத்துக்குமாரரே ஆடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(8) கருணையொடு கருமாரி அம்மன் வடந்தொட்டாட்ட
களிறு கொண்டு செல்வ விநாயகரும் சேர்ந்தாட்ட
மருவி நின்று வேங்கடேசர் பத்மாவதியும் தொட்டாட்ட
மன்னு சபரிகிரீசோனும் மகிழ்வுடனேயேட்ட
தருணமறிந்து வரம்தரும் மாருதியிரும் வடம் தொட்டாட்ட
தக்க பைரவ பெருமானும் சேர்ந்தே நின்றாட்ட
பெருமை நிறை கொள்ளுப்பிட்டி நவதளக் கூடமோங்கும்
பெரு முத்துக்குமாரரே ஆடீரூஞ்சல்.

(9) அருளமுதம் பருகிடவே அருளும் ஈந்து
ஆதிசிவ தந்தைக்கே அருளுபதேசம் தந்து
பொருளறிய ஔவைக்கு ஞான அறிவையளித்து
போர்புரிந்து அசுரசேனை அடியோடளித்து
கருதரிய காதல்லீலை வள்ளியுடன் புரிந்தே
கருணைத் தமிழ்த் தெய்வமென காட்சிதந்தே
மருவியருள் கொள்ளுப்பிட்டி நவதள கூடமோங்கும்
மங்கள முத்துக்குமாரரே ஆடீரூஞ்சல்.

(10) செற்றமிலாக் கங்கை சுதா யாடீரூஞ்சல்
சேவற்கொடி வேலவா ஆடீரூஞ்சல்
அற்றமிலா ஆறுமுகனே ஆடீரூஞ்சல்
அகில லோக நாயகனே ஆடீரூஞ்சல்
சுற்றமிலார்க் குற்றவனே ஆடீரூஞ்சல்
சுந்தர வள்ளிக் குஞ்சரி நாயகாவாடீரூஞ்சல்
குற்றமிலாக் கொள்ளுப்பிட்டி குமரனே ஆடீரூஞ்சல்
குஞ்சர முத்துக் குமாரரே ஆடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்து

வேதியராம் அந்தணர் வாழி வாழி
விளங்கு வேதாகமங்கள் வாழி வாழி
மேதினியில் நல்லாட்சி மிகுந்து வாழி
மேல்ஞான சைவநெறிப் பண்பு வாழி வாழி
ஆதிஅந்தமில்லா அறநெறி தழைத்து வாழி
அழகு மங்கையர் கற்புநெறி வாழி வாழி
சோதி வடிவாயமைந்த கொள்ளுப்பிட்டி பதிவாழி
கோலமயில் வேலன் அருள் வாழி வாழி.

*சுபமஸ்து*

*யாத்தவர்,*
ராம். தேவலோகேஸ்வர குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# திருவூஞ்சற் தொகுப்பு அழகுற அமைய அனுசரணை அளித்த அன்பர் குழாம்

| | | |
|---|---|---|
| 1. | சுகன்தன்ஸ் வீடியோ, | கொழும்பு-06 |
| 2. | உமையாள் ஜுவலர்ஸ், | கொழும்பு-13 |
| 3. | வாகினி ஜுவலர்ஸ், | கொழும்பு-13 |
| 4. | மகேஸா ஹவுஸ், | கொழும்பு-03 |
| 5. | திரு. புவனச்சந்திரன் குடும்பம், | கொழும்பு-03 |
| 6. | திரு. விஸ்வலிங்கம் குடும்பம், | கொழும்பு-03 |
| 7. | திரு. பார்த்தீபன் குடும்பம், | தெஹிவளை |
| 8. | திரு. கந்தசாமி குடும்பம், | கொழும்பு-03 |
| 9. | திரு. றாதா காந்தன் குடும்பம், | கொழும்பு-06 |
| 10. | திரு. குலரத்தினம் குடும்பம், | கொழும்பு-06 |
| 11. | திரு. வைத்திலிங்கம் குடும்பம், | கொழும்பு 03 |
| 12. | திரு. பச்சையாபிள்ளை குடும்பம், | கொழும்பு 06 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Printed by: Unie Arts (Pvt) Ltd., Colombo - 13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org